செ.வெ.எண்: 388 நாள்: 9-8-17

# படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்ட இணையதள சேவை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பத்திரிகை செய்தி குறிப்பு

படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை அளிக்கும் பொருட்டு தமிழக அரசால் கடந்த 2010-ம் ஆண்டிலிருந்து படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் மாவட்ட தொழில் மையத்திற்கு நேரில் வந்து விண்ணப்பிக்கும் சிரமத்தை தவிர்க்கும் வகையில் இத்திட்டத்தில் தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்தே விண்ணப்பிக்கும் வகையில் இணையதள சேவை மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்களால் கடந்த 1.8.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. எனவே, தகுதியுள்ள நபர்கள் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க இனிமேல் www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதளத்தின் மூலமாக விண்ணப்பித்து பின்னர் பதிவிறக்கம் செய்யப்பட்ட தங்களின் விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களுடன் இரு தொகுப்புகள் காஞ்சிபுரம் மாவட்ட தொழில் மையத்திற்கு தபால் மூலமாக அனுப்ப வேண்டும். பின்னர் அவர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். மாவட்ட தொழில் மையத்தில் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது. இத்திட்டத்தின் விபரங்கள் பின்வருமாறு.

இத்திட்டத்தில் உற்பத்தி தொழிலுக்கு **ரூ.10 இலட்சமும்,** சேவை தொழிலுக்கு **ரூ.3 இலட்சமும்,** வியாபாரத்திற்கு **ரூ.1 இலட்சமும்** வங்கிகள் மூலமாக பெற்றுத்தரப்படுகிறது. 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று, வயது 18 முதல் 35க்குள் (SC/ST/MBC BC/முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுதிறனாளிகள் மற்றும் மகளிருக்கு வயது 45க்குள்) உள்ள, காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேல் வசித்து வருபவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம் கடன் தொகையில் 25 சதவிகிதம் அதிகபட்சமாக **ரூ.1,25,000/- வரை மானியம் வழங்கப்படுகிறது.**

மேலும் விவரங்கள் பெற பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், காஞ்சிபுரம் அவர்களை (044-27238837) தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு காஞ்சிபுரம் **மாவட்ட ஆட்சி தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப.,** அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

7/8/17

பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம்,
காஞ்சிபுரம்

மாவட்ட ஆட்சித்தலைவர்
காஞ்சிபுரம்